பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை 06.12.2020 கதிர் 261

## கொழும்பில் மேலும் 3 பகுதிகள் முடக்கம்

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளவத்தை கோகிலா வீதி உட்பட மூன்று இடங்கள் நாளை காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

கொம்பனித்தெருவில் உள்ள ஹுனுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு.

2

## போகம்பறை சிறை கைதிகள் 5 பஸ்களில் கொடிகாமத்துக்கு

### கொரோனாத் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்காக

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 06

கண்டி போகம்பறை சிறைச்சாலைக் கைதிகள் 5 பஸ்களில் இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சிறைச்சாலைகளுக்குச் சொந்தமான பஸ்களில் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

சக கைதிகள் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ள நிலையில், குறித்த கைதிகள் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துவரப்பட்டுள்ளனர்.

2

## குடாநாட்டில் 72 ஆயிரம் பேர் பாதிப்பு

புரவிப்புயலை அடுத்து யாழ். மாவட்டத்தில் 21,884 குடும்பங்களை சேர்ந்த 72 ஆயிரத்து 410 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் தற்போது 42 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 111 குடும்பங்களைச் சேர்ந்த 3841 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், 66 வீடுகள் முழுமையாகவும், 2886 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரண்டாயிரத்தைக் கடந்தது சிறைச்சாலைக் கொத்தணி!

சிறைச்சாலை தொற்றாளர்கள் மேலும் அதிகரித்துள்ள நிலையில் சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துள்ளது.

2

## தானம் வழங்கிச் சென்றவருக்குத் தொற்றுதி: தேரர்கள் உள்ளிட்டோர் தனிமைப்படுத்தல்!

விகாரையில் தானம் வழங்கிச் சென்ற நபருக்கு கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டதை அடுத்து அந்த விகாரையில் உள்ள தேரர்கள் உள்ளிட்டோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

களனி, சுபுகஸ்கந்த பிரதேசத்தில் விகாரையொன்றுக்குத் தானம் வழங்கிய நபரொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று

2

## வலி. கிழக்குத் தவிசாளரிடம் மீண்டும் நேற்று பொலிஸ் வாக்குமூலம் பதிவு!

### அவர் மீது சட்ட நடவடிக்கைக்குத் திட்டம்?



வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபைக்குச் சொந்தமான வீதியை புனரமைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திரைநீக்கம் செய்துவைக்கப்பட்ட திட்ட அறிவிப்புப் பெயப்பலகையினை அகற்றியமை தொடர்பில் நேற்று இரண்டாவது தடவையும் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் அச்சுவேலி பொலிஸாரினால் வாக்குமூலம்

2

## கொரோனா முடிவுக்கு வருவதை உலகம் கனவு காண ஆரம்பிக்கலாம்



### உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் நம்பிக்கை தருகிறார்

கொரோனா வைரஸ் பெருந்தொற்று முடிவுக்கு வருவதை உலகம் கனவு காணத் தொடங்கலாம் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நேற்று

2

## கிளிநொச்சியில் மேலும் ஒருவருக்கு 'கொரோனா'

கிளிநொச்சியில் 20 வயதுடைய இளைஞர் ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

155ஆம் கட்டைப் பகுதியில் ஏற்கனவே தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் அடையாளம் காணப்பட்ட நபர்களின் ஒயில் விற்பனை நிலையம், தண்ணீர் விற்பனை நிலையம் என்பவற்றுக்கு அருகாக மலர்ச்சாலை வைத்திருந்த நபர் ஒருவரின் மகனுக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த மலர்ச்சாலையில் மேற்படி இளைஞர் பணியாற்றி வந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

## யாழ்., கிளிநொச்சியில் நாளை பாடசாலைகளுக்கு விடுமுறை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.06

தொடரும் மழை காரணமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை பாடசாலைகள் நடைபெற மாட்டா என வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளமையோடு பலர் இடம்பெயர்ந்துள்ளனர். இதற்காக சில பாடசாலைகள் முகாம்களாகவும்

2

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கை ஒட்டி நாடாளுமன்றத்தில் உள்ளோரும் கைதாகலாம்

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 06

"ஈஸ்டர் தற்கொலை குண்டுதாக்குதல்களுடன் தொடர்புபட்ட 8 சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்து விட்டன. 257 பேர் விளக்கமறியலில் உள்ளனர். ஆவணங்கள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இனி சட்டமா அதிபர்தான் வழக்கு தொடுக்க வேண்டும். அதனை துரிதப்படுத்துமாறு அவரை எதிர்வரும் திங்கட்கிழமை நேரில் சந்தித்து கோரிக்கை விடுக்கவுள்ளேன்.

2



மணமகள் தேவை

1983, யாழிந்து வேளாளர், ரோகினி

CANADA Citizen, Software Analyst

சொந்த இடம் : யாழ்ப்பாணம்

பதிவு இல 4760

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு

31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)

ஒன்லைன் திருமண சேவை

www.EQMarriageService.com

Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

மணமகள் தேவை

1987, யாழிந்து வேளாளர், அஸ்வினி

DOCTOR, உடுவில்

பதிவு இல 4920

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு

31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)

ஒன்லைன் திருமண சேவை

www.EQMarriageService.com

Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

மணமகள் தேவை

1983, யாழ்.கிறிஸ்தவ வேளாளர், அவிட்டம்

BANK MANAGER, கரம்பொன்

பதிவு இல 4406

31/12/2020 வரை பதிவு கட்டணத்தில் 40% கழிவு

31/12/2020 வரையான பதிவுக்கு தரகர்கூலி இல்லை

Call 076 664 9401 (Whatsapp/Viber)

ஒன்லைன் திருமண சேவை

www.EQMarriageService.com

Ensured Quality Lanka (Pvt) Ltd., Bambalapity, Colombo 04.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழ்., கிளிநொச்சியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயங்குகின்றன. இதே நேரம் மழை தொடர்ந்த வண்ணம் உள்ளமை தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வடக்கு ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனை ஆராய்ந்த ஆளுநர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களின் பாடசாலைகள் மட்டும் நாளை திங்கட்கிழமை இயங்காது என தெரியப்படுத்தியுள்ளமையோடு ஏனைய நாள்கள் தொடர்பில் நாளை நிலைமைக்கேற்ப தீர்மானிக்கப்படும் என அறியத்தந்துள்ளார். -இப்படி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

## கொரோனா முடிவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் நடந்த ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் இணையவழியில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், கொரோனா வைரஸ் தடுப்பூசி சோதனைகளின் முடிவுகள் நம்பிக்கை தருவனவாக அமைந்துள்ளன. எனவே கொரோனா வைரஸ் பெருந்தொற்று முடிவுக்கு வருவதை உலகம் கனவு காண தொடங்கலாம் என கூறினார்.

மேலும், "கொரோனா தடுப்பூசி விநியோக நெரிசலில் ஏழைகளையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும் பணக்கார மற்றும் சக்திவாய்ந்த நாடுகள் மிதித்து விடக்கூடாது" - என கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசும்போது, கொரோனா வைரஸ் பெருந்தொற்று அதன் மிகச்சிறந்த மற்றும் மிக மோசமான பக்கத்தை மனித குலத்துக்கு காட்டி உள்ளது. இரக்கம், சுய தியாகத்தின் ஊக்கம் அளிக்கும் செயல்கள், விஞ்ஞானம் மற்றும் புதுமையின் மூச்சடைக்கக்கூடிய சாதனைகள் மற்றும் ஒற்றுமையின் இதயத்தை தூண்டும் நிகழ்வுகளையும் கூட அது காட்டியுள்ளது என கூறினார்.

## ஈஸ்டர் தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அவ்வாறு வழக்கு தொடுக்கப்பட்ட பின்னர் பணம் வழங்கியவர்கள் யார், சூத்திரதாரிகள் யார் என்பது தொடர்பான அனைத்து தகவல்களும் தெரியவரும். வழக்கு விசாரணைகள் நடைபெறுகையில் இந்த நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் கூட கைதாகலாம். சில இரகசிய தகவல்களை வெளியிடமுடியாது."

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிரணி உறுப்பினர்களால் எழுப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் சி.ஐ.டி., ரி.ஐ.டியின் கீழ் 171 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக 257 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

8 சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. ஆணவங்கள் அனைத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மனித படுகொலை, சூழ்ச்சித் திட்டம் ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரே வழக்கு தொடுக்கவேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் வெளிவரவுள்ளது.

சட்டமா அதிபரை திங்கட்கிழமை (நாளை) நேரில் சந்திக்கவுள்ளேன். அதன்போது இதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு ஒப்படைக்கப்படும்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் நேரில் சந்தித்து நிலைமையை தெளிவுபடுத்தவுள்ளேன்.

அதேவேளை, கடந்த அரசாங்கம் புலனாய்வுதுறையை பலவீனப்படுத்தியதாலேயே இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றது. - என்றார்.

## தானம் வழங்கிச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த விகாரையின் தேரர்கள் உள்ளிட்ட சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மாகொல பொது சுகாதார பரிசோதகர் எஸ்.பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளான நபர் இரண்டாவது முறையாகவும் பி.சி.ஆர். பரிசோதனைக்காக சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நபர் என தெரிவிக்கப்படுகிறது.

## வலி. கிழக்குத் தவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறப்பட்டுள்ளமையுடன் குறித்த அறிவித்தல் பலகையினை மேலதிக விசாரணைக்காக எழுத்துமாகக் கோரிப் பொலிஸார் பெற்றுச் சென்றுள்ளனர்.

இது பற்றி அவர் தெரிவிக்கையில் -

காலை நீர்வேலியில் வெள்ள தணிப்புச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் களப்பணியில் ஈடுபட்டிருந்தபோது அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தவிசாளரைச் சந்தித்து மேலதிக நடவடிக்கைகளுக்காக பிரதேச சபையில் பாதுகாப்பில் உள்ள அறிவித்தல் பலகையினைத் தருமாறு என்னைக் கேட்டுக்கொண்டார்.

நான் கடிதம் ஒன்றைக் கோரி ஆவணப்படுத்திய பின் மேலதிக நடவடிக்கைக்காக என்ற காரணத்தினால் அப் பெயர்ப் பலகையினை வழங்கினேன். அவ்வறிவித்தல் பலகையினை வழங்கியபோது மீளவும் குறித்த பெயர்ப்பலகை அகற்றப்பட்டமைக்கான காரணம் உள்ளடங்கலாக வாக்குமூலம் ஒன்றை மேலதிகமாகப் பொலிஸார் பெற்றனர்.

நான் இன்றைய வாக்குமூலத்தில், பிரதேச சபைக்குச் சொந்தமான வீதி ஒன்றை எமது சம்மதமோ அனுமதியோ பெறாது புனரமைப்பதற்காக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை அவ் அறிவித்தல் பெயர்ப்பலகையிலும் எமது பதிவிற்கு உட்பட்ட வீதியை புனரமைப்பதற்காக ஊரெழு அம்மன் கோவில் வீதியை புனரமைத்தல் என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் பிரதேச சபை ஒன்றின் பகிரப்பட்ட அதிகாரத்தினை நிலைநாட்டுவதற்காக அகற்றினேன் என்பதை அந்த வாக்குமூலத்தில் சொல்லியிருக்கின்றேன்.- என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் சாத்தியங்கள் குறித்து மேலிடத்து வழிகாட்டலில் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர் எனத் தெரிகிறது.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 45 பேர் கைதாகினர்!

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச் சாட்டில் இன்று காலை 5 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் ஆயிரத்து 172 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்படுபவர்கள் எவராயினும் கைது செய்யப்படுவார்கள்.

அதேபோன்று அவர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்பில் மேலும் 3 பகுதிகள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருவாத்தோட்டத்தில் 60ஆம் தோட்டம், வெள்ளவத்தையில் கோகிலா வீதி என்பன இவ்வாறு தனிமைப்படுத்தப்படவுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை காலை 5 மணி முதல் கொழும்பு மாவட்டத்தின் புளுமெண்டல் பொலிஸ் பிரிவு மற்றும் வெல்லம்பிட்டி பொலிஸ் பிரிவின் விஜயபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய பிரதேசங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள களனி பொலிஸ் பிரிவு நாளை காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகின்றது என அரச தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளயிட்டு தெரிவித்துள்ளது.

வத்தளை பொலிஸ் பிரிவின் கெரவலபிட்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, ஹேகித்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, குருந்துஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவு, எவரிவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, வெலிகடமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகியன நாளை காலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், பேலியகொட பொலிஸ் பிரிவின் பேலியகொடவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவு, பேலியகொட கங்கபட கிராம உத்தியோகத்தர் பிரிவு, மீகஹவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு, பட்டிய - வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் நாளை காலை 5 மணிமுதல் தனிமைப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் கிரிபத்கொடை பொலிஸ் பிரிவின் வெலேகொட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவும் நாளை காலை 5 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## இரண்டாயிரத்தைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலை கொத்தணியில் கொரோனா தொற்று உறுதியானவர்களது மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 51 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் 91 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் அதிகாரிகள் 38 பேர் மற்றும் கைதிகள் 562 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ள நிலையில் ஏனையவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## போகம்பறை சிறை கைதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அழைத்து வரப்பட்ட அனைவரும் கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் பாதுகாப்புக்காக யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் அங்கே அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று முற்பகல் 11.45 மணியளவில் கொடிகாமம் தனிமைப்படுத்தல் நிலையத்துக்குச் சிறைச்சாலை பஸ்களில் கொண்டு வரப்பட்ட அனைவரும் குற்றவாளிகளா அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களா (சந்தேகநபர்கள்) என்பது தெரியாத போதிலும் கைதிகள் என்பது மட்டும் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஏன் இந்த வெள்ளம்?

புரெவிப் புயல் பெருமழையைக் கொட்டித் தீர்த்ததையடுத்து ஏற்பட்ட வெள்ளம் யாழ். மாவட்ட மக்களுக்குப் பெரும்பாலும் புதிய அனுபவம்தான்.

எதிர்பாராத இடங்களில் எல்லாம், எதிர்பாராத அளவு வெள்ளம் தேங்கியமை பலரையும் ஆச்சரியத்துக்குள்ளும் அதே சமயம் எரிச்சலுக்குள்ளும் மூழ்கடிக்கத் தவறவில்லை.

வெள்ளத்தையடுத்து உடனடி சீரமைப்பு நடவடிக்கைக்காகக் களத்தில் நேரடியாக இறங்கிய யாழ். நகர மேயர் மற்றும் ஆணையாளர் மீது பல இடங்களில் மக்கள், வர்த்தகர்கள் எரிந்து வீழ்ந்தமையையும், விசனம் தெரிவித்தமையையும் அவதானிக்க முடிந்தது.

வெறுமனே அதிகாரிகளில் அல்லது இப்போது கடமையில் இருக்கும் நிர்வாகிகள் மீது பாய்வதில் அர்த்தமில்லை.

முதலாவது, இது எதிர்பாராத ஒரு மழை. ஒரே சமயத்தில் இவ்வளவு மழை கொட்டி தள்ளியமை வெள்ளத்திற்கான காரணம் என்றாலும், அது மட்டுல்ல விடயம். இத்தகையை மழைப் பொழிவுகளை எதிர்கொள்ளத் தக்கதாக எமது வாழ்விடங்கள் தயார் செய்யப்படவில்லை. அல்லது இருந்த வழி முறைகளை – வாய்ப்புகளை – நாம் நிர்மூலமாக்கி, எமக்கான வசதிகளை நாமே சீரழித்துள்ளோம் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

வெள்ள நீர் தேங்கி, அகற்றப்பட வேண்டிய இடங்களுக்கு ஓடிச் செல்வதற்கான குளங்கள், வாய்க்கால்கள், சீரமைக்கப்படவில்லை. அல்லது ஆக்கிரமிக்கப்பட்டு சூறையாடப்பட்டு விட்டன.

குளங்களை மூடிக் கட்டங்களைக் காட்டியமை, நீரோடும் வாய்க்கால்களை சத்தம் சந்தடியின்றி ஆக்கிரமித்தமை என்று பல அத்துமீறல்கள் நடந்திருக்கின்றன.

கண்ணுக்கு முன்னால் அவை நடந்து கொண்டிருப்பதைப் பார்த்திருந்த சமூகம் இப்போது அதன் பிரதிபலன்களை, பாதிப்புக்களை, விளைவுகளை எதிர்கொள்கின்றது.

பல இடங்களில் குளங்கள் சுருங்கி விட்டன. வாய்க்கால்கள் காணாமல் போய்விட்டன.

ஏதோ ஒரு தமிழ் திரைப்படத்தில், வெட்டிக் கட்டிய கிணறு காணாமல் போய்விட்டது என நடிகர் வடிவேல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும் நகைச்சுவைக் காட்சி போல, இப்போது யாழ் குடா நாட்டுத் தமிழர்தம் வாழ்வில் பல கழிவகற்றும் வடிகால்கள் காணாமல் போயிருக்கின்றன. திரைப்படத்திலோ அது நகைச்சுவைக் காட்சி. நம் வாழ்விலோ அது அவல நிலைமை.

நிர்வாகிகளும், நிர்வாகங்களும் கூட விஞ்ஞான ரீதியில் சிந்தித்து, உய்ந்துணர்ந்து செயற்படாமல், வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற பாணியில் செயற்படுவதும் கூட இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணமாகும்.

நகரத்தின் பல பகுதிகளில் வீதிக் கரைகளில் பெரும் செலவில் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல விடயம்தான். வெள்ளக் காலத்தில் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கான கட்டமைப்புகள் அவை என்று பார்த்தால், பல இடங்களில் வெளி வெள்ளத்தை நமது வீதிகள் வழியே நம் பிரதேசத்துக்கு அழைத்து வரும் வசதியான பாதைகளாக அவை இருந்துள்ளன என்பது இப்போதுதான் தெரிய வருகின்றது என்கின்றனர் பொதுமக்கள் சிலர்.

வயல்கள், சிறு சிறு குளங்கள் எல்லாம் நிரவப்பட்டு குடியிருப்புகளாக்கப்படுகின்றன. வயற் காணிகளை குடியிருப்புகளாக்கும் நடவடிக்கைகளை அதிகாரிகளே பார்த்திருன்றனர். கேட்டால் அது மத்திய அரசின் பொறுப்பு, நாம் தலையிட முடியாது என்பார்கள் மாகாண அதிகாரிகள்.

நம் கண்ணின் முன்னாலேயே யாழ் புல்லுக்குளம், வண்ணான் குளம், நீராவியடிக்குளம் என்று பலவற்றின் விஸ்தீரணம் – விசாலம் – குறுகிவிட்டது.

அத்தகைய சூழலில் மழை வெள்ளம் எங்கு தேங்கும்? வீட்டுக்குள்ளும், நகர வீதிகளிலும்தானே...?

நல்லூர் கோவிலை ஒட்டி ஏற்பட்ட வெள்ளக் காட்சிக்குப் பின்னால் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய காரணங்கள், பின்புலங்கள் இருக்கின்றன என்றே தோன்றுகின்றது. திடீர்ப் பெருமழைக்கு ஏற்பட்ட வெள்ளம் அல்ல இது. சூழலியலில் செய்யப்பட்ட ஒழுங்கு முறையற்ற நடவடிக்கையின் விளைவுதான் இது என்பது போலத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாண நகரம், நல்லூர் போன்ற இடங்களில் வழக்கத்துக்கு மாறாக வெள்ள நீர் ஓடாமல் தேங்கியதன் பின்னால் புதைந்திருக்கக் கூடிய அடாவடித்தனமான – பொறுப்பற்ற – நடவடிக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

தேங்கும் வெள்ளத்தை விரைந்து அகற்றும் உடனடித் துரிதப் பணிகள் முன்னெடுக்கப்படட்டும். பாதிப்புற்றோருக்கான மாற்று ஏற்பாடுகள், நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படட்டும்.

அவை ஒரு புறம் நடக்க, மறுபுறத்தில் இந்த வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டமைக்கு பிரதான காரணமான சூழலியல் நடவடிக்கைகளைக் கண்டு பிடிப்பதும் மீண்டும் அத்தகைய பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்குச் செய்யப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்துத் திட்டம் தயாரிப்பதும் விஞ்ஞான பூர்வமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசின் – ஜனாதிபதியின் – முகவரான ஆளுநருக்கு இக் கோரிக்கை சமர்ப்பணம்.

# மஹர சிறைச்சாலை மோதல்கள் 116 பேரிடம் வாக்குமூலம் பதிவு!

கொழும்பு, நவ.06

மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக 116 பேரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் அறிக்கைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலையின் 11 சிறை அதிகாரிகள், இரண்டு மருத்துவர்கள் மற்றும் 25 கைதிகளிடமிருந்து நேற்று மாத்திரம் 38 அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த மோதலில் உயிரிழந்த 11 கைதிகளில் 06 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த மோதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன கூறினார்.

மஹர சிறைச்சாலையின் கைதிகள் சிலருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமையைத் தொடர்ந்து மேலும் சில கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்ல முயற்சித்த சம்பவத்தைக் காரணமாக கொண்டு கடந்த வாரம் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்படி, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளைத் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் 104 பேர் காயமடைந்து றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுள் காயமடைந்த 71 பேரில் 48 பேருக்கு துரித என்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையோடு, உயிரிழந்த 11 பேரில் 9 பேருக்கு கொரோனா தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வவுனியா நகரசபையின் அதிரடி:**

# 50 கட்டாக்காலி மாடுகள் 4 மணிநேரத்தில் பிடிப்பு!





வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலி மாடுகளினால் நகரின் அழகு சீர்குலைவதுடன் போக்குவரத்துக்கும் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வந்த நிலையில் நகரில் அலைந்து திரிந்த கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன.

வவுனியா நகரசபையினால் நகரசபை உறுப்பினர்களின் மாடுகள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபையினரால் வவுனியா நகர், பட்டாணிச்சூர், வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை முதல் மதியம் வரையிலான காலப்பகுதியில் 50க்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

– இவ்வாறு பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் வவுனியா நகரசபை வளாகத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளன.

மாட்டின் உரிமையாளர்கள் பிடிகூலி 600 ரூபா, தண்டம் ஆயிரம் ரூபா, ஓர் நாள் பராமரிப்பு செலவு 300 ரூபா ஆகியவற்றினை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பராமரிப்பு செலவு நாளாந்தம் 300ரூபா விதிக்கப்படுமெனவும் நகரசபையினர் தெரிவித்துள்ளனர்.

சமீப காலமாக வவுனியாவில் இக் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்துக்கு பெரும் இடையூறுகள் ஏற்பட்டமையுடன் பல வீதி விபத்துக்களும் ஏற்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# பஸ் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டது!

பஸ் பயணங்களின்போது நாளை (திங்கட்கிழமை) முதல் இரண்டு பஸ்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

விசேடமாக பாடசாலை நேரங்களிலும் அலுவலக நேரங்களிலும் குறித்த முறையில் இரண்டு பஸ்களை ஈடுபடுத்த போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த அவர் –

பயணிகளை இருக்கையில் மாத்திரம் அழைத்துச் செல்வதற்கு கடந்த தினம் பஸ் பயணக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் சில வீதிகளில் அதிகமான பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் எனத் தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

நாம் எழுத்து மூலம் அறிவித்துள்ளோம். அவ்வாறு செயற்படும் பஸ்கள் பொறுப்பேற்கப்பட்டு தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் ஒவ்வொரு பஸ் பயணங்களின் போதும் இரண்டு பஸ்களை ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. – என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

# 298 இலங்கையர்கள் திரும்பினர்!

கொழும்பு, நவ.06

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 298 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இந்த அனைவரும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதன்படி டுபாயிலிருந்து இரு விமானங்கள் மூலமாக 169 பேரும், கட்டாரிலிருந்து 41 பேரும், ஆஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து 38 பேரும், ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 50 பேரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணகளும் கொழும்பில் உள்ள பல தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களால் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

# புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை விசாலமாகக் கட்டுகிறது இந்தியா

## 10 ஆம் திகதி பிரதமர் மோடி அடிக்கல் நடுவார்



இந்தியாவில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு பிரதமர் நரேந்திர மோதி டிசம்பர் 10 ஆம் திகதி அடிக்கல் நாட்டுகிறார்.

இத்தகவலை, நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா கூறியதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பணத்தில் 971 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இந்தப் புதிய நாடாளுமன்றக் கட்டடம், நில நடுக்கத்தால் பாதிக்கப்படாத வகையில் அமைந்திருக்கும் என்று ஓம் பிர்லா கூறியுள்ளார்.

இந்தக் கட்டுமானப் பணியில் நேரடியாக 2 ஆயிரம் பேரும் மறைமுகமாக 9 ஆயிரம் பேரும் ஈடுபடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

64,500 சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ள இந்த கட்டடத்தை கட்டும் பணிக்கான ஒப்பந்தம் டாடா நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய நாடாளுமன்றக் கட்டடத்தைவிட 17 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் பெரியது.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் – இந்திய சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டில் – நாடாளுமன்றக் கூட்டம் புதிய கட்டடத்தில் நடைபெறும் என்று நம்புவதாகவும் ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

# தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரிக்கும் கொரோனா!



சென்னை, டிசெ.06

தமிழகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சமீப நாள்களாகக் குறைந்து கொண்டே வருகிறது. இருப்பினும் கொரோனா தொற்றால் மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், அமைச்சர்கள் என மக்கள் பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ் அழகிரிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து தனியார் மருத்துவமனையில் கே.எஸ்.அழகிரி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கே.எஸ்.அழகிரியுடன் தொடர்பில் இருந்தவர்கள் கொரோனா பரிசோதனை செய்து கொள்ளுமாறு தமிழக காங்கிரஸ் ஊடகத்துறை தலைவர் கோபண்ணா வெளியிட்ட அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மும்பையில் அடுக்குமாடி குடியிருப்பில் சிலிண்டர் வெடித்து 20 பேர் படுகாயம்



மும்பையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு வீட்டில் இன்று காலை சிலிண்டர் வெடித்த விபத்தில் 20 பேர் பலத்த காயமடைந்தனர்.

லால் பாக் கணேஷ் கல்லி எனுமிடத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு 2 ஆம் தளத்தில் இன்று காலை சுமார் 7 மணிக்கு சிலிண்டர் வெடித்துச் சிதறியது.

இதில் 20 பேர் காயமடைந்த நிலையில் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தகவலின்பேரில் விரைந்து 2 தீயணைப்பு வாகனங்களில் வந்த தீயணைப்பு படையினர் சுமார் அரை மணி நேரம் போராடி தீயை கட்டுப்படுத்தினர்.

சிலிண்டர் வெடித்ததற்கு என்ன காரணமென உறுதியாக தெரியவில்லை. முதலில் தீ பிடித்ததாகவும், அதையடுத்து சிலிண்டர் வெடித்ததாகவும் முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ரஜினி - கமல் கூட்டு சாத்தியம்?

ரஜினி தொடங்கவுள்ள கட்சியுடன் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி கூட்டணி வைக்க தீவிரம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் அதிமுக, திமுக என இரு திராவிட கட்சிகளும் கூட்டணி அமைத்தோ அல்லது தனித்தோ தேர்தலை சந்தித்து மாறி மாறி ஆண்டு வருகின்றன. ஜெயலலிதாவும், கருணாநிதியும் மறைந்தவுடன் கமல்ஹாசன் தமிழக அரசை விமர்சிக்கத் தொடங்கினார்.

இதையடுத்து 2018 இல் மக்கள் நீதி மய்யம் எனும் கட்சியை ராமநாதபுரத்தில் கமல்ஹாசன் தொடங்கினார். அவர் நாடாளுமன்றத் தேர்தலில் கமல் கட்சி போட்டியிட்டது. ஆனால் நல்ல வாக்கு சதவீதத்தை எடுத்து பல இடங்களில் மூன்றாம் இடத்தை பிடித்தது.

கமல்ஹாசனை போல திமுக, அதிமுகவுக்கு மாற்றான ஒரு அரசியலை முன்னிறுத்த வேண்டும் என ரஜினிகாந்தும் அரசியல் கட்சியை தொடங்குவதாக அறிவித்துள்ளார்.. முன்னதாக ரஜினிகாந்த் போயஸ் தோட்ட இல்லத்தில் பேசிய போது 'மாத்தணும்... எல்லாத்தையும் மாத்தணும் என கூறியுள்ளார்.

இதனால் அவர் நிச்சயம் அதிமுக, திமுகவுடன் கூட்டணி செல்ல மாட்டார். அதே போல் பா.ம.க., தேமுதிக உள்ளிட்ட கட்சிகளுடனும் கூட்டணி அமைக்க வாய்ப்பில்லை. எனவே தன்னை போல் தமிழக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என விரும்பும் கமல்ஹாசன் கட்சியுடன் கூட்டணி வைக்க வாய்ப்பிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சினிமாவில் இருவரும் உச்சத்தில் இருந்தாலும் போட்டி போட்டு கொண்டு நடித்தனர். அவர்களது ரசிகர்கள் அடித்துக் கொண்டனரே தவிர இவர்கள் இருவரும் இன்று வரை நண்பர்கள்தான். இதனடிப்படையில் கமல்ஹாசனும் தனது கட்சிக்கு ஆதரவு அளிக்குமாறு ரஜினியை கேட்டுக் கொண்டிருந்தார். அது போல் சட்டசபை தேர்தல் 2021 இலும் ரஜினியிடம் ஆதரவு கேட்பேன் என அவரது கட்சி அறிவிப்புக்கு முன்னர் கூறியிருந்தார்.

இந்த நிலையில் ரஜினிகாந்த் கட்சியுடன் கமல்ஹாசன் கட்சி கூட்டணி அமைக்க தீவிரம் காட்டி வருகிறார்கள். இதற்காக அடுத்த மாதம் இரு கட்சியின் நிர்வாகிகளும் சந்தித்து பேச வாய்ப்புகள் இருப்பதாகவே தெரிகிறது. அவ்வாறு கூட்டணி அமைந்தால் முதல்வர் வேட்பாளர் யார் என்பதில் கேள்வி எழும்.

கமலும் ரஜினியும் கூட்டணி அமைத்தால் யார் முதல்வர் என்ற கேள்வியின் போது ஸ்ரீபிரியா, கமல்தான் முதல்வர் வேட்பாளராக இருக்க வேண்டும் என்றார். ஆனால் ரஜினிகாந்த் ஏற்கெனவே லீலா பேலஸில் பேசிய போது முதல்வர் வேட்பாளராக தான் இருக்க விரும்பவில்லை என தெரிவித்திருந்தார். அதற்கு தகுதியான ஒருவரை தேர்வு செய்வேன் என்றும் தெரிவித்திருந்தார். எனவே ரஜினியும் கமலும் கூட்டணி அமைத்தால் யாரோ ஒரு நிர்வாகியை முதல்வராக ரஜினி நியமிப்பதற்கு பதில் தனது நீண்ட கால நண்பரான கமலை நியமிக்க வாய்ப்புகள் இருப்பதாக தெரிகிறது

என்ன இதற்கு ரஜினி ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்கள். ஆனால் ரஜினி சொன்னால் எதையும் செய்வார்கள் ரசிகர்கள். இது 1996 இல் கண்கூடாகவே நாம் பார்த்துள்ளோம். அரசியல் கட்சியை தொடங்கி ரசிகர்களை சந்தோஷப்படுத்திய ரஜினி முதல்வர் வேட்பாளர் விவகாரத்தில் அவர் களை நிச்சயம் சமாதானப்படுத்துவார்.

# கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1986.10.20 | பிறந்த திகதி - 1977.10.08 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பரணி | நட்சத்திரம் - ஆயிலியம் |
| பாவம் - 30 1/2 | பாவம் - 46 1/4 |
| கல்வி - Bsc Software | கல்வி - பட்டதாரி |
| தொழில் - Software Engineer | தொழில் - ஆஸ்திரேலியா PR |
| எதிர்பார்ப்பு - கொழும்பில் வேலை செய்யும் Engineer OR Doctor | எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா மணமகன். PR இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# தொற்றிலிருந்து குணமடைந்தோர் இந்தியாவில் 94.37 வீதமாக உயர்வு

புதுடெல்லி,டிசெ.06

இந்தியாவில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோர் விகிதம் 94.37சதவீதமாக உயர்ந்துள்ளது.

இது குறித்து இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் இது தொடர்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

இந்தியாவில் கொரோனாவின் கொடூரம் சமீப காலமாக குறைந்து வருகிறது. இந்த நிலையில், இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 36,011 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 96 லட்சத்து 44 ஆயிரத்து 222 ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவில் இன்று ஒரே நாளில் 41,970 பேர் வைத்தியசாலைகளில் விடுவிக்கப்பட்ட நிலையில், கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 91,00,792 ஆக உயர்ந்துள்ளது. இதனால் கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் விகிதம் 94.37சதவீதமாக உயர்ந்துள்ளது.

கொரோனாவில் தற்போது சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4 லட்சத்து 3ஆயிரத்து 248 ஆகக் குறைந்துள்ளது. ஒட்டுமொத்த பாதிப்பில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 4.18 சதவீதமாகக் குறைந்துள்ளது. தொடர்ந்து 25 ஆவது நாளாக, கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 5 லட்சத்துக்கும் கீழ் குறைந்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் 482 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,40,182 ஆக உயர்ந்துள்ளது. கொரோனாவில் உயிரிழப்பு சதவீதம் 1.45 குறைந்துள்ளது.



கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மராட்டியத்தில் 95 பேரும், டெல்லியில் 77 பேரும், மேற்கு வங்கத்தில் 49 பேரும், கேரளாவில் 32 பேரும், உத்தரப்பிரதேசத்தில் 23 பேரும், சத்தீஸ்கரில் 21 பேரும், பஞ்சாப்பில் 24 பேரும், ஹரியானாவில் 25பேரும், ராஜஸ்தானில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஐசிஎம்ஆர் அறிக்கையின்படி, இந்தியாவில் இது வரை 14 கோடியே 58 லட்சத்து 85 ஆயிரத்து 512 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. இதில் நேற்று மட்டும் 11 லட்சத்து 57 ஆயிரத்து 763 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.

கடந்த ஆகஸ்ட் 7 ஆம் திகதி கொரோனா பாதிப்பு 20 லட்சத்தையும், 23 ஆம் திகதி 30 லட்சத்தையும், செப்டம்பர் 5 ஆம் திகதி 40 லட்சத்தையும் எட்டியது. செப்டம்பர் 16 ஆம் திகதி 50 லட்சத்தையும், 28 ஆம் திகதி 60 லட்சத்தையும், அக்டோபர் 11 ஆம் திகதி 70 லட்சத்தையும் தொட்டது. 29 ஆம் திகதி 80 லட்சத்தையும், நவம்பர் 20 ஆம் திகதி 90 லட்சத்தையும் கடந்துள்ளது.

– இவ்வாறு மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# 45 அடி உயர பாலத்தில் இருந்து சுற்றுலா பஸ் கவிழ்ந்து விபத்து!



## பிரேஸிலில் சம்பவம் ; 17 பேர் பலி

*தென் அமெரிக்க நாடான பிரேஸிலில், 45 அடி உயர பாலத்தில் இருந்து சுற்றுலா பஸ் கவிழ்ந்த விபத்தில் 17 பேர் பலியானார்கள்.*

*அந்நாட்டின் மினாஸ் ஜெராய்ஸ் மாநிலத்தில் ஜோவா மோன்லேவாட் என்னுமிடத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது.*

*விபத்தில் சிக்கி, படுகாயம் அடைந்த 23 பேர் மீட்கப்பட்டு, உடனடியாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.*

*பஸ்ஸின் இயந்திரத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதால், விபத்து நிகழ்ந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. பிரேஸிலில் ஒரே வாரத்தில் நிகழ்ந்த 2 ஆவது மிகப்பெரிய விபத்து இதுவாகும்.*

# 120 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தேவாலயத்தில் பாரிய தீ விபத்து!

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள 120 ஆண்டு பழைமை வாய்ந்த 19 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த கிறித்தவ தேவாலயத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

கிழக்கு கிராமத்தில் உள்ள இந்த தேவாயத்தில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை 5 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்து காரணமாக அங்கிருந்த கட்டடம் முழுவதும் எரிந்து நாசமானது என்றும் இதனை அடுத்து அங்கு சென்ற தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த விபத்தில் நான்கு தீயணைப்பு வீரர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அமைதியாக நடந்து முடிந்தது குவைத் நாடாளுமன்ற தேர்தல்!



குவைத் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் அமைதியாக நடந்து முடிந்தது. அங்கு 50 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 29 பெண்கள் உள்பட 300 இற்கும் மேற்பட்டோர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர்.

நேற்று வாக்குப்பதிவு அமைதியாக நடந்து முடிந்த நிலையில் தேர்தல் பார்வையாளர்கள் வாக்குப் பெட்டிகளை பிரித்து வாக்கு எண்ணும் பணியை ஆரம்பித்தனர்.

இந்தப் பணிகள் முடிந்தவுடன் குவைத்தின் அமீர் புதிய பிரதமரைத் தேர்வு செய்வார். அந்த பிரதமரின் தலைமையில் அமைச்சரவை செயற்படத் தொடங்கும். தற்போதுள்ள அரசு தேர்தலுக்கு பின்னர் தனது பதவியை இராஜினாமா செய்யும்.

# கலிபோர்னியாவில், வேகமாகப் பரவும் காட்டுத் தீ 25 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேற்றம்!



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயால் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

கடந்த புதன்கிழமை, குடியிருப்பு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து, அருகில் உள்ள காடுகளுக்குப் பரவியதால், ஏராளமான கட்டடங்களும், 6 ஆயிரம் ஏக்கர் காடுகளும் கருகி நாசமாகின.

காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் 500 தீயணைப்பு வீரர்களும், 11 ஹெலிகாப்டர்களும் இரவு பகலாக ஈடுபட்டுள்ள போதும், பலத்த சூறைக்காற்றால் தீ கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது.

# ஐரோப்பிய ஒன்றிய மீட்பு நிதியத்திலிருந்து ஹங்கேரி, போலந்து விலக்கப்படுகின்றன



## பிரெஞ்ச் அமைச்சர் தெரிவிப்பு

1.8 டிரில்லியன் யூரோ நிதியை வழங்குவதற்கான முயற்சிகளை இரு நாடுகளும் தொடர்ந்து எதிர்த்தால், ஐரோப்பிய ஒன்றியம் அதன் பொருளாதார மீட்பு திட்டத்திலிருந்து போலந்து மற்றும் ஹங்கேரியை விலக்கும் என பிரான்ஸ் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கை சட்டபூர்வமாக சிக்கலானது என்றாலும் சாத்தியமான ஒன்று என ஐரோப்பிய விவகார அமைச்சர் கிளெமென்ட் பியூன் கூறினார்.

எங்கள் நிலைப்பாடு தெளிவாக உள்ளது, மீட்பு அல்லது சட்டத்தின் ஆட்சியை நாங்கள் தியாகம் செய்ய மாட்டோம். இரண்டையும் இணைக்கும் பொறிமுறையை மீளாய்வு செய்வதில் எந்தச் சந்தேகமும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏழு ஆண்டு வரவு – செலவுத் திட்டம் மற்றும் கொரோனாவுக்குப் பிந்தைய அபிவிருத்தி நிதியில் இருந்து நிதியை வெளியிடுவதை ஹங்கேரியும் போலந்தும் பல வாரங்களாகத் தடுத்துள்ளன.

கொரோனா வைரஸால் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையிலிருந்து வெளிவர முயற்சிக்கும் உறுப்பு நாடுகளுக்கு இந்த நிதி உதவி தேவைப்படுகிறது.

இந்நிலையில் போலந்தும் ஹங்கேரியும் இவ்வாறு நடந்து கொண்டால் பில்லியன் கணக்கான யூரோக்களை இழக்க நேரிடும் என்றும் ஐரோப்பிய விவகார அமைச்சர் கிளெமென்ட் பியூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க மாநில ஆளுநருக்கு ட்ரம்ப் அழுத்தம்?



தாம் வெற்றி பெற்றதாக அறிவிக்கும்படி ஜோர்ஜியா மாநில ஆளுநருக்கு ட்ரம்ப் அழுத்தம் கொடுத்தார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஜோர்ஜியா மாநிலத்தில் ட்ரம்பின் குடியரசுக் கட்சியை ச்சேர்ந்த பிரயான் கெம்ப் ஆளுநராக உள்ளார். அவரைத் தொடர்பு கொண்ட ட்ரம்ப், மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, தமக்கு ஆதரவான அதிபர் தேர்வாளர்களைத் தேர்வு செய்ய வற்புறுத்தினார் எனக் கூறப்படுகிறது.

ஜோர்ஜியாவில் ஜோ பைடன் வெற்றி பெற்றமை செல்லாது என அறிவிக்குமாறும் ட்ரம்ப் ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்தார் எனச் சொல்லப்படுகிறது.

ஆனால் சிறப்பு சட்டசபை கூட்டத்தைக் கூட்ட தமக்கு அதிகாரம் இல்லை என கூறிய ஆளுநர் பிரயான் கெம்ப், ட்ரம்பின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

# சீனாவில், நடனமாடி வகுப்புகளை நடத்தும் ஆசிரியை கை, கால் அசைத்து உற்சாகமாகப் படிக்கும் மாணவர்

சீனாவில், வகுப்பறையில் நடனமாடிய படியே பாடங்களை நடத்தும் ஆசிரியையைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

சைபிங் நகரில் உள்ள ஆரம்பப் பள்ளியில், 6 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு குதிரை ஏற்றம் சம்பந்தமான பாடலை, குதிரை ஏற்ற வீரரின் பாவனைகளுடன் ஆசிரியை 'ஷி சாயி' கற்பித்தார்.

அவரைப் பின்பற்றி, மாணவர்களும், உற்சாகமாக கை கால்களை அசைத்து, சுறுசுறுப்பாக பாடங்களை ஒப்பித்தனர்.

கற்றுக்கொள்வதற்கான ஆர்வத்தை சிறார்களின் உள்ளத்தில் விதைத்தமையால், கடினமான பாடத்தையும் எளிதில் கற்று விடுவார்கள் என, ஆசிரியை 'ஷி சாயி' தெரிவித்துள்ளார்.



# மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் பொலிஸ் நிலையம் தற்காலிக மூடல்

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு கொரோனா

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து பொலிஸ் நிலையம் தற்காலிமாக மக்கள் சேவைக்கு மூடப்பட்டதுடன் குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத் தர் ஒருவர் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தி யசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலை யில் நேற்று அவருக்கு கொரனா தொற்று உள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அவர் கரடியனாறு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப் பிவைக்கப்பட்டுள்ளமையுடன் களுவாஞ் சிகுடி ஆதார வைத்தியசாலையில் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் தங்கியி ருந்து சிகிச்சைபெற்ற விடுதி மூடப்பட்டது டன் அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர் மற்றும் ஊழியாகள் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

இதேபோன்று களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையம் மூடப்பட்டு அங்கிருந்தவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சிக்கல்லூ ரிக்கு தனிமைப்படுத்தலுக்காக அழைத் துச் செல்லப்பட்டுள்ளனர். களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் தொற்றும் நீக்கும் செயற்பாடுகள் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதேவேளை மட்டக்களப்பு வெல்லா வெளி பொது சுகாதார வைத்திய பிரிவுக் குட்பட்ட கிராமங்களில் தனிமைப்படுத் தப்பட்ட 10 நபர்களுக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. அதில் ஒரு நபருக்கு கொரோனா தொற்று இருப்பதாக இன்று 06.12.2020ம் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

வெல்லாவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள பிலாலி வேம்பு விநாயகர் வீதி எனுமிடத்தில் உள்ள இரண்டு பிள் ளைகளின் தந்தையான 41 வயதுடைய வர் இனம் காணப்பட்டுள்ளார்.


இவர் 27.11.2020 திகதி கொழும்புக்குப் போய் 02.12.2020 வீட்டுக்கு வந்தவர் அவரை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொண்ட போதும் தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அவர் தனிமைப்படுத்தப்பட்ட போதும் வயல் வேலைக்கு சென்றதாகவும் அவரு டைய வீட்டில் உள்ளவர்கள் அயல் வீட்டுக் காரர் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு சென்றதாகவும் பல இடங்களுக்குச் சென்று வந்ததாகவும் அப்பகுதி மக்கள் பொதுச்சுகா தார பரிசோதகர்களிடம் தெரிவித்துள்னர்.

அவர் சென்றது இடங்களெல்லாம் வெல்லாவெளி பிரதேசத்தின் பொதுச் சுகா தார பரிசோதகர்கள் மற்றும் கிராம உத்தி யோகத்தர் இனங்காணும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வாறு இனங்காணப்பட்டவர்களை வீடுகளில் வெல்லாவெளி பொது சுகாதார பரிசோதகர்களினால் தனிமைப்படுத்தப் படும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## முன்னாள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தனது 67 ஆவது வயதில் காலமானார்!



முன்னாள் அமைச்சர் டி.பி.ஏக்க நாயக்க தனது 67ஆவது வயதில் காலமாகியுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அவர் கலை மற்றும் கலாசார அமைச்சராகவும் கடமையாற்றி யுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்துக் கான 2010 பொதுத்தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் குருநாகலை மாவட்டத்திலிருந்து மக் களால் தெரிவு செய் யப்பட்ட உறுப்பி னர் என்பதும் குறிப்பிடத்தக்கது. முன் னாள் அமைச் சர் டி.பி.ஏக்கநாயக்க தனது 67ஆவது வயதில் காலமானார்.

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகினார் அலி ஸாஹிர்!

நல்லாட்சி அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸில் இருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் கட்டாய தகனங்களை நிறுத்துமாறு தாக்கல் செய்யப் பட்ட மனுவை கடந்த செவ்வாய்க்கிழமை உயர்நீதி மன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து தாம் இந்த தீர்மானத்தை மேற் கொண்டார் என மௌ லானா குறிப்பிட்டுள்ளார்.



இலங்கையில் முஸ் லிம்கள் இன்று துன்பு றுத்தப்படுகிறார்கள் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தநிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்’க்குள் உள்ள வர்கள் தமது தனிப்பட்ட விடயங்களுக்கே முக்கியத் துவம் வழங்குகின்றனர்

நாடு மற்றும் சமூகம் தொடர்பான அக்கறை அவர் கள் மனங்களில் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள் ளார்.

காங்கிரஸின் சில உறுப்பினர்கள் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக ’வெட்கமின்றி, துணிச்சலுடன்’ வாக்களித்தனர் எனவும் மௌலானா தெரிவித்துள்ளார்.

இந்தச் செயல் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வேலைகளையும் முன்னேற்றத்தையும் சிதறடித்து விட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி உறுப்பினர்களின் போலி, ஏமாற்றும் மற்றும் ஆபத்தான நடத்தை தொடர்பாக நான் தனிப்பட்ட முறையில் வெறுப்படைந்தேன், வெட்கப்பட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்

இதேவேளை அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாக காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திர மாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த சுதந்தி ரம் அளித்தமையைக் கேட்டுத் திகைத்துப் போனேன் எனவும் அலி ஸாகிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

## வவுனியா புதுக்குளம் நீர்த்தேக்கத்தில் விழுந்த மாணவனின் சடலம் 3 நாள்களின் பின்னர் மீட்பு





வவுனியா புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்தைப் பார் வையிடுவதற்கு சென்ற மாணவன் ஒரு வன் வெள்ளிக்கிழமை மாலை நீரில் அடித்து செல்லப்பட்ட நிலையில் இன்று சடலமாக மீட்கப்பட்டார்.

அண்மையில் வவுனியாவில் பெய்த கனமழையின் கார ணமாக வவுனியா புதுக்குளத்தில் அமைந் துள்ள நீர்தேக்கம் நிரம் பியதுடன் மேலதிக நீர் சுருங்கை வழியாக வெளியேறி வருகின் றது. இதனை பார்வை யிடுவதற்காக அதிக மான பொதுமக்கள் மற் றும் இளைஞர்கள் குறித்த நீர்தேக்கத்திற்கு தினமும் சென்ற வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் நீர்த்தேக் கத்தினை பார்வையிடுவ தற்காக தி.தனுசன் (வயது 18) என்ற மாணவன் தனது நண்பர்களுடன் வெள்ளிக் கிழமை மதியம் அங்கு சென் றிருந்தார். இதன்போது நீர் வழிந்தோடும் பகுதியில் அவர் இறங்கிய நிலையில் நீரில் தவறி வீழ்ந்து மூழ் கியுள்ளார்.

இதனை அவதானித்த அவரது நண்பர்கள் நீரு னுள் இறங்கி மாணவனை நீண்ட நேரம் தேடியும் கண்டறிய முடிய வில்லை.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலி ஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், காணா மல் போன மாணவனை நேற்றும் (05.12) எட்டு மணி தாடெக்கம் கடற்படையினர், இராணுவம் மற்றும் கிராமத்து இளைஞர்கள் இணைந்து தேடிய போதும் கண்டு பிடிக்க வில்லை.

இன்றைய தினம் காலை மீண்டும் இளை ஞர்கள் நீர் ஒடும் பகுதியில் தேடுதல் நடத்தி ய போது கல் ஒன்றில் அகப்பட்டு இருந்த நிலையில் குறித்த மாணவன் சடலமாக மீட் கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் தோணிக்கல் பகுதி யை சேர்ந்த, பண்டாரிக்குளம் விபுலாநந்தா கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் ஒரு வனே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

## கண்டியில் திடீரென உயிரிழந்த குரங்குகள்!

கண்டி நகருக்கு அருகில் உள்ள உடவத்தகெலே வனவிலங்கு பூங் காவில் கடந்த சில நாள்களாக திடீ ரென அதிகளவான குரங்குகள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்நிலையில் குரங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோ தனையில் ஏதோ ஒரு வகையான விம் உடலில் பரவியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்தப் பூங்காவில் பல குரங்கு கள் உயிரிழந்த நிலையில் சடலங் களாக மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குரங்குகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருக்க லாம் என சந்தேகத்தில பி.சி.ஆர். பரிசோனை மேற்கொள்ளப்பட்டுள் ளது.



அதில் குரங்களுக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை எனவும் உடலில் விஷம் பரவியதால் அவை உயிரிழந்துள்ளன எனவும் பேரா தனை பல்கலைக்கழகத்தின் கால் நடை பீட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## நாடாளுமன்றில் இன்று எனது கடைசிநாள் தயவுசெய்து பேசுவதற்கு அனுமதியுங்கள்!

### கோரிக்கை விடுத்த ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, டிசெ. 06

நாடாளுமன்றில் எனது கடைசி நாள் இன்றாகத்தான் இருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரஞ்சன் ராம நாயக்க தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நாடாளு மன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனதுரையில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீதிமன்ற அவதூறு தொடர்பான எனது வழக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட உள்ளது. அத்துடன் விசா ரணை முடிவடைந்த நிலையில் விரைவில் தீர்ப்பை எதிர்பார்த்துள் ளேன்.

எனவே 8 ஆம் திகதி வழக்கு உள்ள நிலையில் நான் சிறைக்கு செல்லப் போகின்றேன். எனவே இன் றையதினம் என்னை பேச அனும திக்கவும் என அவர் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2020 இல் வெளியிடப்பெற்றது.